செ.வெ.எண்: 520 நாள்: 17.09.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**
**சமூகநீதி நாள் உறுதிமொழியினை**
**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில்**
**அனைத்து அலுவலர்கள், பணியாளர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளையொட்டி, சமூகநீதி நாள் உறுதிமொழியினை அனைத்து அலுவலர்கள், பணியாளர்கள் ஏற்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (17.09.2021) நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பெ.வே.சரவணன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

சமூக நீதி நாள் உறுதி மொழியின் விபரம் வருமாறு:

<u>சமூக நீதி நாள் உறுதிமொழி</u>

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற அன்பு நெறியும் - யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற பண்பு நெறியும் எனது வாழ்வியல் வழிமுறையாகக் கடைபிடிப்பேன் !

சுயமரியாதை ஆளுமைத் திறனும் - பகுத்தறிவுக் கூர்மைப் பார்வையும் கொண்டதாக எனது செயல்பாடுகள் அமையும் !

சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்ளைகளுக்காக என்னை நான் ஒப்படைத்துக் கொள்வேன் !

மானுடப் பற்றும் மனிதாபிமானமும் ஒன்றே எனது இரத்த ஓட்டமாக அமையும் !
சமூக நீதியையே அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைக்கும் எனது பயணம் தொடர இந்த நாளில் உறுதியேற்கிறேன் !

என்ற உறுதி மொழியினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் எடுத்துக் கூற அனைத்து அலுவலர்கள், பணியாளர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) கருணாகரன், சமூகப் பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் கிருஷ்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) அமுதப்பிரியா, ஆட்சியரக அலுவலக மேலாளர்கள் செந்தமிழ்செல்வன், சார்லஸ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ரெ.மதியழகன் மற்றும் அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**